செ.வெ.எண்:59 நாள்:29.04.2020

கரூர் மாவட்டம்

**கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொரோனா தொற்றில் இருந்து பூரண குணமடைந்தத் 95 வயது மூதாட்டி வீடுக்கு அனுப்பிவைக்கப்பட்ட போது கண்ணீர் மல்க மருத்துவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.**

அதன் விபரம் வருமாறு:

கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டவர்களில் திண்டுகல் மாவட்டத்தை சேர்ந்த 95 வயது மூதாட்டி உட்பட 5 நபர்கள் பூரண குணமடைந்த நிலையில் அவர்களை இன்று (29.04.2020) மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.ரோஸிவெண்ணிலா, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் கைதட்டி வாழ்த்தி பழங்கள் கொடுத்து வழியனுப்பி வைத்தனர்

உலகையே அச்சுறுத்தி வரும் கொரோனா தொற்று பரவாமல் தடுக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையிலும், மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர், மதிப்பிற்குறிய தலைமை செயலாளர், சுகாதாரத்துறை செயலாளர் ஆகியோரின் அறிவுறுத்தலின் அடிப்படையிலும் கரூர் மாவட்டத்தில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் அவ்வப்போது கரூர் மாவட்டத்தின் பல பகுதிகளில் கொரோனா தொற்று தடுப்பு பணிகளை பார்வையிட்டு அறிவுரைகளை வழங்கி வருகின்றார்கள்.

இந்நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களின் தொடர் முயற்சியால் கரூர் மாவட்டத்திற்கு அற்பணிக்கப்பட்டுள்ள இந்த அரசு மருத்துவக்கல்லூரி என்பது இன்றைய சூழலில் ஒரு வரப்பிரசாதமாக இருக்கின்றது. உலகத்தரம் வாய்ந்த கட்டமைப்புடன் கூடிய மருத்துவக்கல்லூரியில் உயர்தரமான சிகிச்சைகளை மருத்துவர்கள் தொடர்ந்து வழங்கி வருகின்றார்கள். அதனால்தான், கரூர் மட்டுமல்லாது நாமக்கல் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இத்தகைய சூழலில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டவர்களில் மருத்துவர்களின் தொடர் சிகிச்சையால் பூரண குணமடைந்த திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 95 வயது மூதாட்டி உள்ளிட்ட 5 நபர்களும் இன்று (29.04.2020) வீட்டுக்கு வழியனுப்பிவைக்கப்பட்டனர். அவர்களில் 95 வயது மூதாட்டி அவர்கள் இந்த வயதிலும் தன்னை நல்ல தரம் வாய்ந்த சிகிச்சை அளித்து குணமடைய செய்தற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாவட்ட நிர்வாகம் மற்றும் மருத்துவர்களுக்கு கண்ணீர்மல்க நன்றி தெரிவித்து கொள்கிறேன் என்றார்.

கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துமனையில் கொரோனா தொற்றுடன் அனுமதிக்கப்பட்டவர்களில் 164 நபர்கள் இதுவரை பூரண குணமடைந்து அவரவர் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

தற்போது கொரேனா தொற்று பாதிப்புடன் கரூரைச் சேர்ந்த 1 நபரும், நாமக்கல்லைச் சேர்ந்த 8 நபர்களும், திண்டுக்கல்லைச் சேர்ந்த 6 நபர்களும் என 15 நபர்களும் தொடர் சிகிச்சையில் உள்ளனர்.

அனைவரின் கூட்டு முயற்சியால் விரைவில் கரூர் மாவட்டத்தில் கொரோனா தொற்று இல்லை என்ற நிலையினை உருவாக்க மருத்துவர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து பணியாற்றி வருகிறது.

**வெளியீடு: செய்தி மக்கள் தெடாடர்பு அலுவலர், கரூர்.**